**21.07.2022**

**OS.No. 15/2021 PW : 1, திரு. சம்பத்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

தாவா சொத்துக்கள் என் தாயாருக்கு பாத்தியபட்டதா என்று கேட்டால் என் தந்தை தாவா சொத்துக்களை சுயமாக சம்பாதித்து எழுதி வைத்தார். அவ்விதம் எழுதி வைத்தது பற்றி என் முதல் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் என்னுடைய பராமரிப்பில் இல்லை என்றும் பிரதிவாதியின் பராமரிப்பில் தான் இருக்கிறார் என்று சொன்னால் பிரதிவாதிக்கு திருமணம் ஆகாததால் என் தாயார் பிரதிவாதியுடன் இருந்தார். எனக்கும் என் தாயாருக்கும் இடையே ஒரு வழக்கு நடந்தது. அந்த வழக்கு என் எனக்கு தெரியாது. அந்த வழக்கு எந்த சொத்துக்கள் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டது என்பது குறித்து என்னுடைய பிராதிலோ முதல் விசாரனையிலோ சொல்லவில்லை என்றால் நான் சொல்லவில்லை. பழைய வழக்கை என் தாயார் தான் என்மீது தாக்கல் செய்தார். மொத்த சொத்தையும் நான் தான் அனுபவிக்கிறேன் என்று என் தாயார் வழக்கு தாக்கல் செய்தார் அந்த வழக்கு தள்ளுபடி செயய்ப்பட்டது. அந்த வழக்கு எண் 482/2007ஆகும். எனக்கும் என் தாயாருக்கும் சிறு மனஸ்தாபம் இருந்தது. பாகப்பரிவினை கோரி என் தாயார் வழக்கு தாக்கல் செய்த பின்னர் நாங்கள் பேசிக் கொண்டோம். 2002ல் என் தாயார் தாவா சொத்து சம்பந்தமாக பிரதிவாதிக்கு ஒரு உயில் எழுதிவைத்திருக்கிறார் என்றால் அந்த உயில் பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதி என் தாயார்

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.22 18:46:04 +0530

இறந்தபின்பு 2 வருடம் கழித்து பிரதிவாதி பெயரில் உள்ள உயிலை பற்றி என்னிடம் சொன்னதால் நான் அதைபற்றி என் வழக்கறிஞரிடம் சொன்னேன். 2018 டிசம்பரில் என் தாயார் இறந்தார். தேதி 20, 21 என்று ஞாபகமில்லை. அம்மா சொத்து அவர் காலமான பின்பு எடுத்துக் கொள்ளலாம் என்று பேசாம் இருந்தேன். என் தம்பி என்னிடம் சொல்லும் வரை அந்த உயில் பற்றியோ அந்த ஆவணங்கள் பற்றியோ எனக்கு தெரியாது. என் தாயார் இறந்தபின்பு பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன். என் பெயரில் என் தாயார் பதிவு செய்யாமல் எழுதிவைத்த உயிலின் தேதி ஞாபகமில்லை. தாவா சொத்தை பொறுத்து என் தாயார் பிரதிவாதிக்கு எழுதிவைத்த உயிலை தவிற எனக்கு எந்த விதமான ஆவணத்தையும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உயில் போலியானது என்றும் அதை எழுத வேண்டிய கட்டாயத்தில் என் தாயார் இருந்ததில்லை என்றால் சரியல்ல. எனக்கு உயில் எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் என் தாயார் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு உயில் எழுதி வைத்த 10, 15 நாட்களில் என் தாயார் காலமாகிவிட்டார். என் தாயார் திடீரென்று என்று தான் இறந்துவிட்டார். என் தாயார் பல வருடங்களாக உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றும் சவிதா மருத்துவமனையில் கூட சிகிச்சை பெற்றார் என்றும் எனக்கு உயில் எழுதி வைத்ததாக கூறப்படும் காலத்தில் என் தாயார் சக்தி அற்று, நல்ல மனநிலையில் இல்லாமல் இருந்தார்

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.22 18:46:09 +0530

என்றால் சரியல்ல. என் தாயாரை பிரதிவாதி பராமரித்தார் என்றும் அவர் தான் மருத்துவ செலவுகளை செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்திலிருந்து வந்த வருவாயான ரூ.50,000/-லிருந்து தான் பிரதிவாதி என் தாயாருக்கு மருத்துவ செலவுகளை செய்தார். என்னுடைய உயிலில் என் தாயார் ஏற்கனவே உயில் எழுதி வைத்திருந்தாரா என்பது பற்றி அதை ரத்து செய்கிறாரா என்பது பற்றியும் எழுதி இருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. என் தாயார் உயில் எழுதும் போது நானும், 2 சாட்சிகளும் உடன் இருந்தோம். எங்கள் ஊரைச்சேர்ந்த வெங்கடேசன் மற்றும் பூபதி ஆகியோர்கள் சாட்சிகளாக கையொப்பம் போட்டார்கள். அவர்களை என் தரப்பில் விசாரிக்க தயாராக இருக்கிறேன். என் தாயார் கைரேகை தான் வைப்பார். என் உயிலில் கைரேகைக்கு கீழே என் மகன் எழுதினார். 11.12.2018 அன்று நானும் என் மனைவியும் என் மகனும் சேர்ந்து பிரதிவாதிகள் வீட்டில் படுத்த படுக்கையாக இருந்த என் தாயாரை வலுக்கட்டாயமாக தூக்கி சென்றோம் என்றும் இதுசம்பந்தமாக பிரதிவாதி மணவாளநகர் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்று சொன்னால் என் தாயார் நல்ல நிலையில் தான் இருந்தார். அந்த புகாரின் மீது போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. சொத்துசம்பந்தமாக என் தாயார் இறந்தபின்னர் தான் புகார் கொடுத்தார். போலீஸார் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். தாவா சொத்துக்கள் போக எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே பாகம்

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.22 18:46:14 +0530

பிரிக்கப்படவேண்டி வேறு சொத்துக்கள் இருக்கிறதா என்றுகேட்டால் என் தாயார் சொத்துக்களை பொறுத்து நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் தந்தையின் சொத்துக்கள் பொறுத்து பிராது கொடுக்கவில்லை. பழைய வழக்கில் சொத்துக்களை பிரித்து கொடுத்தார்களா என்றால் அந்த வழக்கு தள்ளுபடி செய்துவிட்டார்கள். என் தந்தையின் பெயரில் உள்ள சொத்துக்களை வாய்மொழியாக பிரித்திருக்கிறோமே ஒழிய எழுத்து மூலமாக பிரிக்கவில்லை. தாவா சொத்துக்கள் போக என் தாயாருக்கு வேறு சில சொத்துக்களும் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. என் தாயாரின் சொந்த ஊர் காதர்வேடு என்ற கிராமம் ஆகும். அங்கு என் தாயாருக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை. பாப்பரம்பாக்கம் கிராமத்தில் என் தாயார் பெயரில் சர்வேஎண் 261/19, 261/13 14 மற்றும் 21 சென்ட் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. அது என் தாயாருக்கு வாய்மொழியாக ஒதுக்கப்பட்ட சொத்து என்று மேற்கூறிய வழக்கில் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இதர சொத்துக்களில் இவ்வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றும் ஆகவே இவ்வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. என் தந்தையின் சொத்துக்களை எவ்வகையில் பிரித்துக்கொண்டோம் என்று சொல்லாமல் உண்மையை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாய்மொழியாக என் தந்தையின் சொத்துக்களை பாகம் செய்யவில்லை என்றும் ஆகவே தான் அதை பற்றி இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சார்ந்துள்ள உயில்

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.22 18:46:19 +0530

என்னால் தயாரிக்கப்பட்ட போலியான உயில் என்றால் சரியல்ல. 2004ம் வருடம் முதல் என்னுடன் என் தாயாருக்கு பேச்சுவார்த்தை இல்லை என்றும் அவரும் என்னுடன் பிரியத்துடன் இல்லை என்றால் சரியல்ல. பாப்பரம்பாக்கம் கிராமத்தில் என்னுடைய வீடு உள்ளது. பிரதிவாதியும் பாப்பரம்பாக்கம் கிராமத்தில் தான் குடியிருக்கிறார். பழைய வழக்கில் நான் சாட்சியம் அளிக்கும் போது என் தாயார் பிரதிவாதியின் பராமரிப்பில் இருப்பதாக சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் பிரதிவாதிக்கு திருமணம் ஆகாததால் பிரதிவாதியுடன் என் தாயார் இருந்தார். என் தாயார் இறப்பதற்கு 3 மாத்திற்கு முன்பு திருமணம் ஆனது. என் தாயாரை பிரதிவாதி தான் பராமரித்தார் என்றால் அது ஊருக்கே தெரியும் என்றால் சரியல்ல. என் தாயார் ஈமச்சடங்குகளை பிரதிவாதி மட்டுமே செய்தார் என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

S GANAPATHISAMY — Digitally signed by S GANAPATHISAMY Date: 2022.07.22 18:46:24 +0530

I Additional District and Sessions Judge,
Tiruvallur.